# கடற்கரை கவியரங்கு– 638

**நாள்: 02-06-2024**

# அறிவோம் இயலே!

மாற்றம் இல் வாழ்வென்று, மறுபடியும் சொல்லாதீர்!
ஏற்றமும் தாழ்வும் எண்ணத்தின் நிலையே!
காற்றின் திசையில் கப்பல் நகர்ந்தாலும்,
சீற்றமாய் வானிலை சீறியெழுந்தாலும்,

வணிகம் செய்து வாழ்ந்து நிறைந்த;
தமிழரின் நிலையை மனதில் கொள்வோம்!
வாழ்வை நகர்த்தும் நிலையென்றாக்காமல்,
ஒவ்வொரு நிலையிலும் மகிழ்வித்து வாழ்வோம்!

பாழும் கிணற்றில் தடுமாறி விழுகையில்,
காலில் இடறும் தேன்கூடு கலைய,
வழிந்த தேன் துளி உதட்டில் படவே,
உயிர் பிரியும் நிலையில் சுவைத்து மகிழ்ந்தான்,

என்று ஒரு பாவினை செய்தவன் தமிழன்!
இன்முகத்தோடு யாவையும் காண்போம்!
நன் மனத்தோடு யாவிலும் நிறைவோம்!
தேடல் வாழ்வுள்ளுமோர் தேன்சுவை அறிந்து,

தெளிந்த மனத்துடன் நிறைந்து வாழ்வோம்!
தேடலில் முழுமை திகட்டாதிருக்குமே!
ஊடலும் கூடலுமாய் ஒவ்வொரு நிலையும்,
தேடிக்களித்து தெளிந்த மனத்துடன் வாழ்வோம்!

அடிக்கடி தோன்றும் அற்புதக் கேள்வி!
அழுத்தும் இவ்வாழ்வின் அறந்தான் என்ன?
அளித்தவர் யாரோ? இறையின் வடிவோ!
புளித்த கதைகள் மறந்து, புதுமை செய்வோம்!

- **கவிவளவன்.** ஆகிய **கு.ப. அசோகன்.**
**02-06-2024 (மதியம்:02-45)**